# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106

## செய்தி தகவல்

**செய்தி தகவல் எண். 4/2016** **நாள் 02.08.2016**

### மாவட்ட தேர்தல் அலுவலர்கள் நியமனம்

தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்கள்) விதிகள், 1995, விதி 6 (2)-ன் கீழ் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஊரக உள்ளாட்சி தேர்தல்கள் நடத்த மாவட்ட தேர்தல் அலுவலர்களாக (சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் நீங்கலாக) நியமித்து தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் சட்டபூர்வ ஆணை எண். 2/2016/தநாமாதேஆ/ஊதே-1, நாள் 01.08.2016-ன் வழி அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

மேலும், 2006ம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள், மூன்றாம்நிலை நகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (தேர்தல்கள்) விதிகளின் விதி 7ன் கீழ் பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் தேர்தல்கள் நடத்த தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் நீங்கலாக) மாவட்ட தேர்தல் அலுவலர்களாக செயல்புரிவார்கள். சென்னை மாநகராட்சியைப் பொறுத்தமட்டில் சென்னை மாநகராட்சி ஆணையர் மாவட்ட தேர்தல் அலுவலராக செயல்புரிவார். இதற்கான உத்தரவை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் ந.க.எண்.3800/2016/நதே1, நாள் 01.08.2016ன் வழி வழங்கியுள்ளது.

அதன்படி, மாநில தேர்தல் ஆணையத்தின் கண்காணிப்பு, கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கான வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் வெளியிடுதல், பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மேற்கொள்வார். மேலும், கிராம ஊராட்சிகளுக்கு, ஊராட்சி ஒன்றியங்களுக்கு மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு உறுப்பினர்களையும், கிராம ஊராட்சிகளுக்கு தலைவர்களையும் தேர்ந்தெடுப்பதற்கான

தேர்தல்களையும், ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் தலைவர்கள் மற்றும் துணைத்தலைவர்கள், கிராம ஊராட்சிகளின் துணைத்தலைவர்கள் மற்றும் மாவட்டத் திட்டக்குழு உறுப்பினர்கள், ஆகியோர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல்களையும், பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி தேர்தல்களையும் நடத்துவது தொடர்பான அனைத்து பணிகளையும் ஒருங்கிணைந்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மேற்பார்வை செய்வார்கள். மேலும், அவர்கள் அவ்வப்போது மாநில தேர்தல் ஆணையத்தால் ஒப்படைக்கப்பட்ட பிற கடமைகளையும் செய்வார்கள்.

இத்தகவல் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் தெரிவிக்கப்படுகிறது.

02/08/16
மக்கள் தொடர்பு அலுவலர்